
# ஆத்ம ஜோதி



உலகம் போற்றும் உத்தமன்



# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்

ஜோதி 13 | பிலவஹூ ஐப்பசி ஸ்ரீ 1ந்உ ( 14-10-61 ) | சுடர் 12

## பொருளடக்கம்


1 கீதாஞ்சலி ... 357
2 சர்வோதயம் ... 359
3 புதுயுகம் படைக்கும் புனிதர் ... 362
4 இரு எழுத்துக்களின் மகிமை ... 368
5 காந்திமகான் துதி ... 370
6 எனது ஐரோப்பிய யாத்திரை ... 371
7 மனித இயல்பு ... 374
8 சுத்தானந்தரின் கடிதங்கள் ( 15 ) ... 375
9 கஞ்சன்காடு ஆனந்தாச்சிரமச் செய்தி ... 378
10 மனிதப்பிறவி எப்பொழுது எவ்விதம் பயன் பெறுகிறது? ... 379
11 ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாப்பிரபுவின் வாழ்க்கை வரலாறு ... 383



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

" ஆத்ம ஜோதி நிலையம் " நாவலப்பிட்டி. [சிலோன்]


மகாகவி தாகூரின்

# கீதாஞ்சலி

## 13. சிக்கெனப் பிடித்தேன்!

பறக்குது நேரம்; என்றன்
பாதையோ நீண்ட தூரம்!
பிறந்ததோ, ஆதி ஜோதிப்
பொறியொன்றில்! பெரு வனம்போல்
விரிந்தபல் புவி கடந்து,
விண்மணி மண்ட லங்கள்
நிறைந்தவான் வழி நடந்து,
நீண்டயாத் திரைசெய் கின்றேன்!

எனக்குநீள் தொலையாய்த் தோன்றும்
இடம்,நினக் கருகில் வைகும்!
தினந்திக்குத் திசைதெர் யாமல்,
தியங்கியான் அலைந்தா லும்,அத்
தனிப்பெரு முயற்சி யே,நின்
தண்ணருட் கீதம் போன்று,
இனிமையாய்த் தெளிந்த தெய்வப்
பாதையில் இட்டுச் செல்லும்!

அன்னிய வீட னைத்தும்
அலைந்துவந் திட்ட பின்பே,
தன்னகம் தனைப்பிர யாணி
சார்வதே போன்று, யான்நின்
பொன்னகக் கோயில் காணப்
புறப்பட்டும், புறவை யங்கள்
எண்ணற்றுத் திரிந்த லைந்து
இறுதியில் வந்திங் குற்றேன்!

(அடிக்குறிப்புகள் மகாத்மாவின் போதனைகளாகும்.)

திக்கெல்லாம் துருவி ஆய்ந்தும்,
தென்படா நினை,என் கண்கள்
உட்குவிந் தகத்து ளேகண்
டுணர்த்திட, உவகை பொங்கச்
சிக்கெனப் பிடித்தேன் நின்தாள்!
செல்வதெங் கினிநீ, ஐய?
எக்கணத் தினிலும் சேயேன்
இனியுன்னை விடுவ துண்டோ?

“எங்கேநீ, எங்கே” என்று
ஏங்கிநின் றுழன்று என்னுட்
பொங்கிய கண்ணீ ரெல்லாம்
புரண்டொன்றுய்த் திரண்டு, கோடித்
தங்கநீ ரோடை யாகத்
தழைத்து“உண்மை நானே” என்ற
மங்கலப் பெருவெள் ளத்திற்
கலந்தொன்றி வயங்கு தம்மா!

— பரமஹம்ஸ தாசன்.

## கிராமக் குடியாட்சி

கிராம ஆட்சியையோ அதன் கூட்டமைப்பையோ அமைக்கப் பெரிய அரசியல் கட்சிகளும் அதிகாரிகளும் தலையிடுவது சில இடங்களில் காணும் நிகழ்ச்சியாகும். இது தேவைப்படாதது. பெரிய நாட்டை ஆள்வதற்கு வேண்டுமாயின் அத்தகைய கட்சிகளைப் பயன் படுத்தலாம். என்னுடைய கருத்து அதுவும் கூடாது என்பதே. வல்லவர்களாக மட்டுமன்றி, நல்லவர்களாகவும் உள்ளவர்களை நாடாள வருந்தி அழைத்து அவர் வழி ஆணையியங்க நாடு ஆளப் பெறுமாயின் நன்று. ஆனால், அது குடியாட்சிக் கொள்கைக்கு மாறானது என்பர். என்றாலும், இந்த மாறுட்டத்தால்தான் ‘அரசியல் கயவர்களின் சூதாட்டம்’ என்ற மேலை நாட்டுப் பழமொழி எழுந்தது. ஆகவே அதை மாற்ற அரசியலில் நல்லவர்கள் இடம்பெற வேண்டும். சிறப்பாகக் குடியாட்சியில் - கிராம மக்கள் ஆட்சிப்பொறுப்பில் அத்தகைய நல்லவர்கள் இடம் பெறல் வேண்டும். அண்ணல் காந்தி அடிகளின் எண்ணமும் அதுவே. அடுத்த அவர் பிறந்த பொன்னாளில் தமிழ்நாடு முழுதும் கிராமக் குடியாட்சி அரும்புகிறது. அதன் செயல் சிறந்து, மக்கள் நலம் பெற்று ஓங்குவார்களாக என வாழ்த்தி அமைகின்றேன். -பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்

பிராணத்தியாகம் செய்தேனும் தீமையை எதிர்க்காவிடில்



# சர்வோதயம்

ஆசிரியர்

“எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க!” இதுவே சர்வோதயத்தின் கருத்தாகும். காந்தியடிகள் வாக்கால் போதித்து வாழ்க்கையால் சாதித்த இலட்சியங்களின் சகல அம்ஸங்களும் இதில் அடங்கியுள்ளன. அவர் அமரரான தினத்திலிருந்து முப்பத்தெட்டாம் நாளில், அன்னாரின் ஆத்மீகப் புதல்வரான ஆசாரிய வினோபா அவர்களின் ஆசியுடனும் ஆதரவுடனும் நிறுவப்பட்டது சர்வோதய சமாஜம். அதுவேஇன்று,அரசியல்அதிகாரமோகம்அணுவுமற்றஊழியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு, அகில இந்திய நிலையமாக விளங்கி அருந் தொண்டாற்றி வருகிறது. காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஆச்சிரமங்கள், சங்கங்கள், கல்வி நிலையங்கள், கைத்தொழிற் சங்கங்கள் எல்லாம் இன்று இந்த அகில பாரத சேவா சங்கத்தின் கீழேயே தத்தம் கடமைகளைச் செய்கின்றன.

ஆங்கில மொழியில் காந்தியடிகள் வரைந்த மணிவாசகங்களெல்லாம், உலகுக்கு உய்ய வழிகாட்டும் முறையில் தொகுப்பு நூல்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அத்தொகுதிகள் இந்திய மொழிகளில் தமிழில்தான் மிகச் சிறந்த விதத்தில், முதனூல்களின் தரம் குறையாது, கருத்துக்கள் சிதையாது, எவரும் எளிதில் விளங்கக் கூடிய தெளிவான நடையில் மொழிபெயர்க்கப் படுகின்றனவென்பதை அறிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். சென்னை காந்தி நூல்வெளியீட்டுக் கழகத்தினர் குறித்த தமிழாக்கப் பணிக்கு மிகத்தகுதி வாய்ந்த ஆசிரியக் குழுவைத் தேடிக் கண்டுபிடித்ததே இச் சிறப்பிற்கு முக்கிய காரணமெனலாம். அத்தோடு, தஞ்சாவூரிலுள்ள சர்வோதய பிரசுரா

ஒருநாளும் கடவுளை அறிய முடியாது.

லயத்தின் அயரா முயற்சியும் பிரசாரத் திறனும் துணைக் காரணமாகும். கருத்துரைக் களஞ்சியமாக அமைந்த, விஷய வாரியாகத் தொகுத் தெழுதப்பட்ட சிறு சிறு நூல்கள் பல்லாயிரக் கணக்காய்த் தமிழ் நாடெங்கும் விற்பனையாகின்றன. அவற்றின் விலையுமோ மிகச் சொற்பம்.

காந்தீயக் கொள்கைகள் தமிழ் மொழியில் தனிச்சிறப்படைந்து வருவதுபோலவே, சர்வோதய இயக்கமும் தமிழ் நாட்டில்தான் மேலோங்கி வருகிறதென்று தயங்காமற் கூறலாம். இது வெறும் புகழ்ச்சியுரையல்ல; வடநாட்டு மாபெரும் தலைவர்கள் பலரின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட அபிப்பிராயமுமாகும். இதில் வியப்பொன்றுமில்லை.

“எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே”

“கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே”

என இருநூறு வருஷங்கட்கு முன்னரே பாடியவர் தமிழ்நாடுசெய்த தவத்தால் அவதரித்த தாயுமான மஹரிஷிகளல்லவோ? எனவே சர்வோதயக் கொள்கைகள் தமிழினத்தின் இரத்தத்திலேயே ஊறிக்கிடந்தனவெனலாம்.

“எல்லாரும் அமரநிலை எய்தும் ஓர் நன்முறையை இந்தியா உலகிற்களிக்கும்” என்னும் பாரதி வாக்கு அந்த ஊற்றிலிருந்து வந்ததேயாம். அவர் பாடிய போது, இந்தியா அடிமை நாடாக இருந்தது. சுதந்திர உதயத்தின் அறிகுறிகள் கூட அப்போது தென்படவில்லை. அந்த வரகவியின் உள்ளத்தில் அன்று மிளிர்ந்த திவ்ய திருஷ்டியைக் குறித்து யார்தான் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியும்? அவர் கண்ட கனவுகளையெல்லாம் நனவாகக் காணும் அரும் பாக்கியத்தை நாமெல்லோரும் பெற்றுள்ளோம்.

---

“உண்மை” தான் நான் அறியும் கடவுள்.



“நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

என்று அன்று பாரதியார் கோரியவை இன்று வினோபாஜி வாக்கில் பூதானம், கிராமதானம், சம்பத்துதானம் சிரமதானம் என மிளிர்ந்து நாடெங்கும்பரவி, அறிஞர் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

உலகில் செல்வத்தைக் குறித்த வேற்றுமைகளை ஒழித்து ஏழைகளின் வறுமையைத் தீர்த்து, கொலையும் கொள்ளையும் போட்டியும் பொறாமையுமில்லாத, அன்பு மலர்ந்த அமைதி செறிந்த நல்வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்கும் ஆசாரிய வினோபாஜியின் ஜயந்தி விழாவும் பாரதி தினக் கொண்டாட்டமும் ஒரே நாளில் பொருந்தியிருப்பது தெய்வ சங்கற்பமாகும்.

காந்தியடிகளின் சேவையை (1) ஹரிஜன விமோசனம் (2) பெண்கள் விடுதலை (3) கிராம சுயராஜ்யம் (4) நாட்டின் சுதந்திரம் என்ற தலையங்கங்களின் கீழ் விபரித்து விடலாம். இவையெல்லாம் இந்தியாவின் எல்லைக்குள் நின்றுவிடும். ஆனால் இந்த அணுக்குண்டுச் சகாப்தத்தில் உலகுக்கு அளித்துப் போன அருங்கொடை வினோபாஜி அவர்களே. ‘ஜேய் ஹிந்த்’ என முன்னுளில் வழக்கிலிருந்த நீதி வாக்கியத்தை வினோபாஜி “ஜேய் ஜகத்” என மாற்றியமைத்ததின் பரம இரகசியமான காரணத்தை இன்றையவுலகம் உணரத் தொடங்கியுள்ளது. அளப்பரும் தவ வலிமை கொண்டு இப் பெரியார் போதிக்கும் தர்மவழி நின்று மனிதசமுதாயம் உய்வடையப் பிரார்த்திப்போமாக! புதுயுகம் படைக்கும் இப் புனிதரைப்பற்றிய ஓர் அரிய கட்டுரையின் சாரத்தைப் பிறிதோரிடத்திற் பிரசுரித்துள்ளோம்.

எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க!

---

கடவுளை அறிவதற்கான ஒரேவழி அஹிம்சையான அன்புதான்

# புதுயுகம் படைக்கும் புனிதர்

(சுரேஷ் ராம்)

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காஷ்மீர் யாத்திரையின் போது, விநோபாஜி பாகல்காம் என்னுமிடத்தில் தங்கியிருந்தார். புனிதமான பெரும் யாத்திரை ஸ்தலமான அமர்நாத் அதற்குப் பக்கத்தில்தான். விநோபாஜியிடம் "நீங்கள் அமர்நாத்துக்கும் போவீர்களல்லவா? என்றுஒருவர் கேட்டார். "இல்லை" என்று அழுத்தமான குரலில் கூறிய பாபா;

"எனது யாத்திரையின் நோக்கம் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிப்பதல்ல; எனது கடவுளும் கோயில்களில் இல்லை. இன்றிருக்கும் உயிரற்ற மதத்தின் பக்தனல்ல நான். தரித்திர நாராயணனைத் தரிசிப்பதே எனது குறிக்கோள்" என்றார்.

### ஏழைகளின் கண்ணீர்

அழகுக்கும், ரம்மியமான காட்சிகளுக்கும் பிரசித்தமானது காஷ்மீர். உலகெங்குமிருந்து எல்லாவிதமான மக்களும் உல்லாசத்திற்காக அங்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் கொண்டுசெல்லும் சாமான்களையெல்லாம் ஏழைக் கூலியாட்கள் தான் தூக்கிக் கொண்டு போவார்கள். அவர்களுக்கு வயிறார ஒரு வேளைச் சோறு கிடைப்பதுகூடக் கடினம். ஒரு நாள் காலை, தள்ளாத வயதுள்ள ஒரு கிழவன் பெருத்த மூட்டை முடிச்சுகளைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தார். அவனுக்குப் பின்னால், அவனுடைய குழந்தைகள் முதுகில் மூட்டை சுமந்த வண்ணம் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு வாய்ச் சோற்றுக்காக அவர்கள் மூவரும் அன்று ராத்திரி முழுவதும் நடந்திருக்கிறார்கள். இந்தப் பரிதாபக் காட்சியைக் கண்ட பாபா, "இந்தக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயது. ஆனால் பிழைப்பதற்கே வழி தேட வேண்டிய நிலையில், பள்ளிக்கூடம் போக இவர்களால் எப்படி முடியும்? இது மிகவும் அநியாயம். இதே நிலைமை நீடித்தால், ஏழை மக்களின் சாபம் நம் அரசாங்கத்தின் மீது விழும். அச் சாபத்திலிருந்து அது தப்ப முடியாது" என்று மனம் வெதும்பிக் கூறினார்.

இந் நிகழ்ச்சிக்குப் பின்னர், தமது சுமைகளைத் தாமே தூக்கிச் செல்வதென்று பாபா முடிவு செய்து கொண்டார். அந்த மலைப் பிராந்தியத்தில் 15 பவுண்டு சுமையை அவர் சுமந்து கொண்டுவந்தார். அவருடைய உடல் நிலை பலவீனமாயிருப்பதால் அவ்வாறு செய்வது கூடாதென்று யாரோ சொன்னார்கள். பாபா அதற்கு இவ்வளவு எடை நான் அதிகரித்திருப்பதைப் பற்றி நீங்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவீர்கள் என்று நம்புகிறேன்! என்று புன்முறுவலுடன் பதிலளித்ததைப் பார்க்க வேண்டுமே.

### மதத்தின் பொருள் எது?

ஒருநாள் அவர் பதினான்கு மைல் தூரம் நடக்கவேண்டியிருந்தது. பாதையோ மிகவும் கரடு முரடாக இருந்தது. அதனால் அவர் எந்தச் சாமானையும் சுமந்து கொண்டு வரக் கூடாது என்று யாத்திரைக் குழுவினர் சொன்னார்கள். "நாமே சாமான்களைத் தூக்கிக் கொண்டு போனால்தான், ஏழைகளின் கஷ்டத்தை உணரமுடியும்" என்று கூறிவிட்டு நிற்காமல் யாத்திரையைத் தொடர்ந்து நடத்தினார். வழியில் அவர் கூறினார்; "காஷ்மீரின் அழகு, கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தருவதற்குப் பதிலாக, மனதுக்கு வேதனையைத்தான் தருகிறது. ஏனென்றால் சுமை முழுவதும் ஏழைகளின் பேரில்தான் விழுந்திருக்கிறது. பிரயாணிகள் தங்கள் சாமான்களை யெல்லாம் இந்த உழைப்பாளிகளின் முதுகில் ஏற்றிவிட்டு ஊர் சுற்றுவதைப் பார்த்தால், உண்மையிலேயே மிகவும் பரிதாபகரமாகத் தான் இருக்கிறது. இது சரியல்ல" என்று கூறியதுடன்,

"இந்த ஏழைகளிடையே நான் உழைக்கும் தெய்வத்தைக் காண்கிறேன். பூமியின் பளுவை அனந்தன் என்னும் நாகம் தாங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லுவார்கள். எனக்கு இந்த உழைப்பாளிகள் தாம் அனந்தர்கள்" என்றார்.

விநோபாஜியின் நவீன தவ முயற்சியின் ரகசியம் இதில் தான் உள்ளது.

இன்று அரசியலிலும் சரி மதத் துறையிலும் சரி, ஏழைகளைச் சட்டை செய்வதே இல்லை. மதம் நாளுக்கு நாள் நசித்துக் கொண்டே வருகிறது என்றும் இளைஞர்களிடம் மதவுணர்ச்சியே இல்லை என்றும் சிலர் குறை கூறுகிறார்கள். ஆனால் ஒரு கேள்வி கிளம்புகிறது. மதம் எங்கே இருக்கிறது? அது வாழும் உருவம் யாது? அது

---

நன்மையோதீமையோநம்மிஷ்டப்படி செய்யஅனுமதிப்பதால் கடவுளே உலகில் தலைசிறந்த ஜனநாயக வாதியாவார்.

மதாசாரியர்கள்அதைப்புத்தகங்களிலும்நான்குசுவர்களுக்குள்ளுமே அடைத்துவிடவில்லையா? வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள், சாப்பிடுவதற்காக ஹோட்டலில் ஒன்றாக அமரலாம்; ஆனால் கடவுளைத் தொழுவது என்று வந்தவுடன் தனித்தனிக் குழுவாகப் பிரிந்து போகிறார்களே ஏன்? மதமானது, மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள பிளவை அதிகப்படுத்துகிறது; பகைமையையும் சுயநலத்தையுமே வளர்க்கிறது. சுயநல உணர்ச்சிதான் நாளடைவில் மோட்சம் என்ற எண்ணத்தை உண்டாக்கியது. மோட்சமடைவது ஒன்றுதான் மதம் அல்லது பக்தியின் லட்சியம் என்றாகி விட்டது. ஆனால், தனியொருவர் மட்டும் மோட்சமடைவது சாத்தியமல்ல என்பதை உணர்ந்து கொள்ளத் தவறி விட்டோம். எனது மோட்சம் என்ற வார்த்தையே தவறானது என்கிறார் பாபா. எனது அல்லது உனது என்ற எண்ணம் இருக்கும் வரையிலும் மோட்சம் என்பது கிடைக்கவே கிடைக்காது. சமுதாயம் முழுவதும் ஒன்று சேர்ந்து கூட்டாகச் செய்யும் முயற்சியின் மூலம், சமுதாயம் முழுவதுமே மோட்சமடைவது அல்லது விடுதலை பெறுவது தான் நமக்குத் தேவை. ஒரு சிலரது நன்மைக்காக மட்டும் அமைந்த தத்துவமோ மதமோ பயன்தர மாட்டாது. வினோபாஜீயின் வார்த்தைகளில் சொன்னால்,

''சமுதாய அல்லது கூட்டுறவு முயற்சி என்னும் கொள்கையிலிருந்து பல சந்நியாசிகள் மிகவும் விலகிப் போய் விட்டனர். மதத்தின் செயலின்மை காரணமாக, இந்த சமுதாயப் பற்றுதலின்மை இன்னும் மோசமாகிவிட்டது. தங்களுக்கு ஆதாரமாக சாஸ்திரங்களை அவர்கள் மேற்கோள் காட்டுகின்றனர். ஆனால் எல்லா மதங்களும் சாஸ்திரங்களும் சமுதாயக் கூட்டு முயற்சிக்கு வழி காட்டவில்லையெனில் அவற்றால் ஒரு பயனும் இல்லை, நமது முயற்சியும் மதமும் சமுதாயத்தின் நன்மைக்காகவே என்றிருப்பதால் நாம் சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக ஆவதற்குப் பாடுபடுவோம்.''

நமது பக்தி, அறிவு, செயல் இம்மூன்றும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்பது வினோபாஜீயின் கொள்கை. கர்மம் அல்லது செயலே பக்தியும் ஞானமுமாவதை அவர் காண விரும்புகிறார். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் சேவையும் அன்பும் அறிவும் பொங்கித் ததும்புவதாக இருக்கவேண்டும்.





நூற்றுக் கொண்டும் ஆசிரமவாசிகளுடன் சேர்ந்து தண்ணீர் இறைக்கும் பாரசீகச் சக்கரத்தைச் சுற்றிக்கொண்டும் அவர் பிரார்த்தனை நடத்தியதற்குக் காரணம் இதுதான். இந்த விசித்திரக் காட்சி, பலரையும் சிந்திக்கச் செய்திருக்கிறது.

பக்திக்கு உபாசனை இன்றியமையாதது என்று கூறப்படுகிறது. ஆனால் செயல் அதற்கொரு தடங்கல் என்று ஏன் கருத வேண்டும்? செயலினால் மன ஒருமை ஏற்படுவதால், மண்வெட்டி பிடித்து வயலில் வேலை செய்வதானாலும் சரி, நூற்பு, நெசவு, மாவரைத்தல் முதலிய எத் தொழிலினாலும் சரி, செயலினால் உபாசனைக்கு அதிக உதவியே ஏற்படும் என பாபா எண்ணுகிறார். உழைப்பில்லாத உபாசனை அல்லது வழிபாடு சமுதாயத்திற்கு ஆபத்தைத்தான் தரும். மதஸ்தாபனங்கள் உள்ள நிலைமையையும் அவைகளுக்குச் சொந்தமான நிலங்களில் பாடுபடும் உழைப்பாளிகளின் நிலைமையையும் பார்த்தால் இது நன்கு புலனாகும். நமது புனித ஸ்தாபனங்களும் மடாலயங்களும் பாமர மனிதனை ஏன் அணுக முடியவில்லை என்பதற்குக் காரணங்களைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டியதில்லை.

உபாசனையே எல்லாம் என்பதும் சரியல்ல. ஆன்மிக உணர்வு, நல்ல நடத்தை, எல்லா உயிர்களிடத்தும் தானும் அவைகளில் ஒன்று என்னும் ஒருமையைக் காணுதல் - இதுதான் உபாசனையின் உண்மையான நோக்கம். அது இல்லாவிட்டால், உபாசனையே அழிவுத்தன்மை வாய்ந்ததாகிவிடும். உபாசனையின் பயன் என்ன என்று ஒருவர் வினோபாஜிடம் கேட்டபோது அவர் கூறினார்:

''உபாசனையும் யோகப் பயிற்சியும் இந்திரிய சம்பந்தமானவை; ஆன்மிகத் தன்மை வாய்ந்தவையல்ல. இருந்தபோதிலும் ஆன்மிகத்துடன் அவற்றை இணைக்க முடியும். செயல் மட்டும் ஆன்மிகத் தன்மை வாய்ந்ததாக இல்லாதது போலவே, பிரயாணமும் தியானமும் இருக்கலாம். மண்வெட்டி எடுத்து வெட்டுவதும், தியானம் செய்வதும் - இரண்டுமே ஆன்மிக உணர்வுடன் நடைபெறலாம். எல்லாருமே யோகிகளாகி விட்டால், அப்புறம் உணவளிப்பது யார்? மண்வெட்டி கொண்டு வேலை செய்வது ஒரு மிகச் சிறந்த உபாசனை; ஏனெனில் எல்லாருமே அதை அனுஷ்டிக்க முடியும். யோகிகளுக்கு மற்றவர்கள்தான் உணவளித்துக் காப்பாற்றுகிறார்கள். எனவே, யோகிகளைக் காட்டிலும் மற்றவர்கள்

தான் அதிக ஆன்மிக உணர்வு படைத்தவர்கள் என்று கருதுகிறேன். ஏனெனில் யோகியும் தங்களுள் ஒருவர், அவருக்கு உணவளிப்பது தங்கள் கடமை என்று அவர்கள் உணர்கிறார்கள். இவ்வாறு பிரிவு மனப்பான்மை இல்லாத அத்வைத உணர்வு பெற்றவர்களே யோகிகளைக் காட்டிலும் சிறந்தவர்கள்.''

இந்த ஒருமையுணர்வுதான் எல்லா மதங்கள் அல்லது தவ முயற்சிகளுக்கும் சாரமாக விளங்குவது. நம்மை அடுத்து உள்ளவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பயன்படுவதுதான் நமது முழுமுதற் கடமை. சுரண்டல், பலாத்காரம் ஆகியவற்றை நம்மிடமிருந்தே நாம் களைந்தெறியாவிட்டால் இக்கடமை நிறைவேறுவதற்கு வழியில்லை. சமயத்துறைப் பண்டிதர்கள், அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகள், அரசாங்க அல்லது பொதுநலப் பணியாளர்கள் - ஆகிய நாம் அனைவரும் நம் அகத்தைப்பரிசோதனை செய்து பார்த்தால் மற்றவர்களுக்குச் சேவை செய்வதைப் பற்றியும் ஆண்டவனை ஆராதிப்பது பற்றியும் உபதேசிக்கும் நாம் ஒவ்வொருகணமும் அதற்காக மற்றவர்களைச் சார்ந்து அவர்களைச் சுரண்டியே வாழ்க்கை நடத்துவதை அறிவோம். நாஸ்திகம் வளர்ந்து கொண்டே வருகிறது என்று நாம் வருத்தப்படுகிறோம்; ''இந்த வகையான நாஸ்திகத்தைக் கண்டு நான் பயப்படவே இல்லை'' என்று வினோபாஜி கூறுகிறார். கடவுளின் பெயரால் ஏழைகளை வஞ்சித்தும் அவர்களுக்கு இரக்கங் காட்டாமல் சுரண்டியும் வாழும் ஆஸ்திகர்களைவிட நல்லெண்ணம்படைத்த நேர்மை குன்றாத நாஸ்திகர்கள் மிகவும் நல்லவர்கள் என்றே சொல்லலாம்.

ஒரு சமயம் திரு பிர்லா, ''நமது மனப்பான்மை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே வருகிறது. நல்ல தன்மைகள் வீழ்ச்சியடைந்து ஆன்மிக உணர்ச்சியே அருகிக் கொண்டிருக்கிறது. இதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?'' என்று வினோபாஜியிடம் கேட்டார். பாபா இதற்கு அளித்த விடை மிக மிகத் தெளிவானது.

''இதைப் பற்றிப் பயப்படுவதற்கே இடமில்லை. உலக யுத்தத்தின் விளைவாக நமது தார்மிகக் கருத்துக்களில் சில வலிவிழந்து விட்டன. இதற்கு அவை ஒரு சார்பானவையாக இருந்ததுதான் காரணம். செல்வத்தைச் சேர்த்து வைக்கக் கூடாது என்று நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆனால் நடைமுறையிலேயே திருடனுக்குத் தண்டனை கொடுத்து பணம் சேர்த்துக் குவிப்பவனை இஷ்டம் போல் திரியும்படி விட்டு விடுகிறோம். திருடுவது இருக்கக் கூடாதென்றால், செல்வத்தைச் சேர்த்து வைப்பதும் இருக்கவே கூடாது. பணம் சேர்ப்பவர்கள் தண்டனைக் குரியவர்கள் அல்ல என்பதைத்தான், நான் ஒரு சார்பானது என்று கூறுகிறேன். இத்தகைய ஒரு சார்பான கருத்துக்கள் இனி நிலைபெறமாட்டா என்பதே எனது கருத்து.''



இந்தச் சூழ்நிலையில் நாம் நமது கருத்துக்களையும் புனர் பரிசீலனை செய்ய வேண்டும். பழையன கழிந்து புதியன புகுதல் வேண்டும். இத் துறையில் மகாத்மா காந்தியடிகள் ஒரு தொடக்கத்தைச் செய்துவைத்தார். சத்தியமும் அகிம்சையும் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டுமல்ல, சமுதாயம் முழுவதற்குமே சொந்தமான நல்லியல்புகள், ஒவ்வொரு செயலும் இவற்றையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தினார். சமுதாய முயற்சிக்கான வாசலைத் திறந்து விட்டு சமுதாயத்தின் கூட்டு இன்பத்திற்கும் நல்வாழ்வுக்குமான வழிமுறையைத் தொடங்கி வைத்தார். அதை நாம் நிறைவேற்ற முனைய வேண்டியது எஞ்சி நிற்கிறது.

இன்று ஒரு புதிய யுகத்தின் தொடக்கத்தில் நாம் நிற்கிறோம். சமுதாயப் பண்புகள், உண்மையான சமுதாய மதம் ஆன்மிக உணர்வு, ஆகியவை உருவாகும் காலம் ஆரம்பமாகிவிட்டது. விஞ்ஞானமும் ஆன்மிகமும் இணைந்து, சுரண்டலும் அநீதியும் பலாத்காரமும் அற்ற புதியதொரு உலகத்தை நாம் உருவாக்கும் நிலையில் இருக்கிறோம். சமுதாய பொருளாதாரத் துறையில் இச்சாதனையை நிறைவேற்றுவதற்கான ஒரு முயற்சிதான் பூமிதான - கிராமதானப் புரட்சி. ஆன்மிகத்தை அடிப்படையாகவும் செயலை ஆதாரக் கம்பமாகவும் கொண்ட சமுதாய சாதனை அல்லது வழிபாடு என்றே இதைச் சொல்லலாம்.

( கிராம ராஜ்யம் )

---

டால்ஸ்டாய் பண்ணையில் ஆசிரியர்கள் எதைத் தாம் செய்யவில்லையோ, அவற்றைச் செய்யுமாறு சிறுவர்களிடம் சொல்லக் கூடாது என்பதை ஒரு விதியாக்கி விட்டோம். ஆகையால் ஒரு வேலையைச் செய்யுமாறு குழந்தைகளிடம் கூறினால், ஒரு ஆசிரியரும் அவர்களுடன் இருந்து வேலையைச் செய்து கொண்டிருப்பார். எனவே, சிறுவர்கள் எதைக் கற்றுக்கொண்டாலும் அதை மகிழ்ச்சியுடன் கற்றுக்கொண்டார்கள்

\- மகாத்மா காந்தி

---

நான் மனித ஜாதியில் ஒருவன். அதனால் மனித ஜாதியை விட்டு வேறெங்குங் கடவுளைக் காண முடியாது.

# இரு எழுத்துக்களின் மகிமை!

ஜபம் என்ற கற்பனையைத் தேடிக்கண்டு பிடித்தவரது ஒரு நோக்கம் எழுத்தறிவுக்குச் சுருக்கமான உருவளிப்பதாகும். எழுத்தறிவு ஏகமாய்க் குறையத் தொடங்கியதைக்கண்டதும் அதன்வாயில் ஜபத்தின் ரொட்டித்துண்டு எறியப்படுமாயின் அதன் குரைப்பெல்லாம் அடங்கிவிட, வாழ்க்கையைப்பயனுள்ளதாக்குவதற்கு அவனுக்குச் சமயம் கிடைக்குமென்பது அதன் உட்பொருளாகும்.

**வினோபாஜி**

வான்மீகி முனிவர் இராமாயணத்தை நூறு இலட்சம் சுலோகங்களில் எழுதினார். அதைப் பறித்துப்போகும்விஷயத்தில் தேவர், அசுரர், மானிடர், ஆகியோரிடையில் சண்டை தோன்றிவிட்டது. சண்டை தீருவதாயில்லை. அப்பொழுது சிவபெருமான், அவர்கள் வழக்கைத்தீர்ப்பதற்கு அதிகாரியாய்அமர்த்தப்பட்டார். அவர் மூன்று பிரிவினர்க்கும், ஒரு பிரிவுக்கு முப்பத்துமூன்று இலட்சம் சுலோகங்கள் வீதம் பகிர்ந்தளித்தார். அப்பொழுது ஒரு இலட்சம் எஞ்சியது. அதையும் மும்மூன்று கூறுகளிட்டுக் கொண்டே போனபொழுது இறுதியில் ஒரு சுலோகம் எஞ்சிற்று. இராமாயணத்தின் சுலோகங்கள் 'அனுஷ்டுப்' என்ற யாப்புவகையைச் சேர்ந்தவை. அனுஷ்டுப் சுலோகத்தில் முப்பத்திரண்டு எழுத்துக்கள் இருக்கும். சிவபெருமான் அவைகளையும் தலைக்குப் பத்து எழுத்துக்களாக பிரித்துக் கொடுக்கவே, இரண்டு எழுத்துக்கள் எஞ்சி நின்றன. அவ்வெழுத்துக்கள் யாவை? 'ரா' 'ம' என்பவை. சிவபெருமான் அவ்விரு எழுத்துக்களையும் தாம் செய்த வேலைக்குக்கூலியென்று எடுத்துக்கொண்டார். சிவபெருமான் தமது எழுத்தறிவை இரண்டு எழுத்துக்களைப் பெறுவதோடு நிறுத்திக்கொண்டதாலேயே எந்தத் தேவனோ, அசுரனோ, மானிடனோ அவருடன் போட்டியிட முடியாமற் போயிற்று. மகான்களும் இலக்கியத்தின் சாரம் முழுவதையும் ராம நாமத்தில் கொணர்ந்து வைத்து

நான் நம்பிக்கை வைப்பது கடவுளிடம் மட்டுமே.



விட்டார்கள். ஆனால் துரதிர்ஷ்டமுள்ள பாமரமனிதனுக்கு இது தெரிந்தால்தானே!

மகான்கள் இராமாயணத்தை இரண்டு எழுத்துக்களில் முடித்துவிட்டார்கள். ரிஷிகளோ வேதங்களை ஒரே எழுத்தில் அடக்கிவைத்துவிட்டார்கள். "எழுத்தறிவு பெறும் ஆசை உன்னை விடவில்லையென்றால் "ஓம்" கார ஜபம் செய், போதும்" என்பது ஓர் ரிஷி வாக்கு.

## பொன்னிலும் சிறந்தது!

ஆங்கில நாட்டிற்கு அணியென ஓங்கிப்
பாங்குற விளங்கும் லண்டன்மா நகரில்
மாணவர் ஆகி மாண்புறு முறையில்
காந்தியார் கல்வி கற்றிடும் காலை;
மெட்ரிகு லேசன் தேர்வு தன்னிலே
பொது அறிவு என்னும் பாடப் பகுதியில்
வினாவுறு தாளில் விரவிய தொருவினா.
"பொன்னிலும் பொலிந்து விளங்குவ தெதுவோ?"
என்பதே அவ்வினா! எண்ணிய காந்தியார்
வினாவுக்கேற்ற வியத்தகு விடையாய்
நன்கு நவின்றனர் காண்மின்,
"வாய்மையே!" என்று ஆய்திறனோடே!

— **வி. ஜீ. சீனிவாசன்**

நான்மக்களிடம் நம்பிக்கைவைப்பது கடவுளிடம் நம்பிக்கைவைப்பதால்தான்

# காந்தி மகான் துதி

வாழ்கநீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
விடுதலே தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!

— பாரதியார்

இத்தனைநாள் உலகமெலாம் இருந்தறிந்த
பெரியவர்கள் இசைத்த ஞானம்
அத்தனையும் ஒருருவாய்த் திரண்டதெனக்
கலியுகத்தே அவதரித்தோன்
சத்தியமே மந்திரமாய் சாந்தமொன்றே
தந்திரமாய் சமயம் தந்த
உத்தமனும் காந்திமுனி உச்சரித்த
சாத்விகத்தை உறுதிகொள்வாம்.

— இராமலிங்கம்பிள்ளை

ஆயிரமாண் டுக்கொருகால் அவதாரம்
செய்திடுவர் பெரியார் என்ப
நீயவருள் ஒருவனெனல் நிறைமதிநேர்
மின்மினியென் றுரைப்ப தொக்கும்
மாயிருஞா லத்தினிலே நின்போல
வாழ்ந்திட்டான் ஒருவன் உண்டோ?
தாயனையாய்! தண்ணளியே! சத்தியமே!
தவப்பழமே! தன்னேர் இல்லாய்!

— ராய. சொ.





# எனது ஐரோப்பிய யாத்திரை அநுபவங்கள்

( க. இராமச்சந்திரன் )

( இலங்கை வானொலிப் பேச்சைத் தழுவி வரையப்பட்டது )

ஐரோப்பிய யாத்திரை அநுபவங்கள் என்னும் இத் தலையங்கம் சிலருக்கு வியப்பைக்கொடுக்கலாம். வியாபார அலுவலாக ஜேர்மனியில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு, இங்கிலாந்து சென்று கொண்டிருந்த ஓர் பம்பாய் இந்துவை ஃபிராங்போட் விமான நிலையத்தில் சந்திக்க நேர்ந்தது. நமது நாட்டு வழக்கப்படி, ஊர், பேர், உத்தியோகம் முதலியவற்றை விசாரித்த பின்னர், "நீங்கள் ஐரோப்பியா வந்த நோக்கம்யாதோ?" என்று அவர் கேட்டார். "யாத்திரை செய்கிறேன்" என யான் இருசொற்களில்பதில்சொன்னதும்அவர் உண்மையில் திடுக்கிட்டுப் போனார். "என்ன ஐயா! இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு யாத்திரைக்காக வரும் இந்துவும் இருக்க முடியுமா?" என்று இரண்டாம் கேள்வி போட்டார். "இந்தியாவில் வியாபார நிலையங்களும், இயந்திர சாலைகளும் இருப்பதுபோலவே, ஐரோப்பாவில் யாத்திரைக்குரிய தலங்கள் உள்ளன; தரிசிக்கவேண்டிய பெரியார்கள் உளர்." என அடக்கமாய்ப் பதில் சொன்னேன். "உங்கள் சுத்த வெள்ளைப் பருத்தி உடையே இக் கண்டத்திற்கு வித்தியாசமாகத்தான் இருக்கிறது" எனப் புன்சிரிப்புடன் கூறிவிட்டு, "முன்னொருதரமும் பரிஸ் நகருக்குப் போயிராத நீங்கள், ஃபிரெஞ்சு மொழி தெரியாத நிலையில், இரவு பிரயாணத்தை எடுத்தது புத்தியான விஷயமல்ல. ஆகையால், நடுநிசியில் பரிஸ் சேர்ந்ததும் கவனமாய் இருங்கள்" என்று எச்சரிக்கை கொடுத்தார். அவர் அன்புடன் கூறிய புத்திமதிக்கு நன்றி கூறி "உள்ளத்தில் அன்பு என்னும் மொழி சதா பேசிக்

கொண்டிருந்தால் எல்லார்க்கும் அது விளங்கும், எவ்வித தீங்கும் நேராது'' எனச் சொல்லிப் பிரிந்தேன். அதே அன்பருடன் பின்னர் ஓரே விமானத்தில் பம்பாய்க்குப் பிரயாணஞ் செய்யும் சந்தர்ப்பத்தை திருவருள் கூட்டியது. அப்போது, ஐரோப்பாவில் யான் பெற்ற சில அற்புத அனுபவங்களைக் கேட்டு அவர் முன்னிலும் பன்மடங்கு வியப்புற்றார்.

எந்த விஷயத்திலும்சரி, நமது நோக்கம் நாம் வாழ்க்கையைப்பற்றிக் கொண்டுள்ள லட்சியத்தைப் பொறுத்தே அமையும். வாழ்க்கையை பல மக்கள் கண்கொண்டுபார்க்கின்றனர். அதை ஒரு பெரும் போராட்டமாகக் கருதுவோருண்டு. களியாட்டமாகவோ சூதாட்டமாகவோ எண்ணுவோருண்டு. கடுந்திண்டாட்டாட்டமாகச் சிந்தித்து வருந்துவோருண்டு. ''நாடகமே உலகம்'' என்று சொல்லி வாழ்ந்து செல்வோருமுண்டு. இவ்வாறு வெவ்வேறு விதத்தில் கருதும் மக்கள் எல்லாத் தேசத்திலும் உளர். இவர்கள் மத்தியில் வாழ்க்கையை ஓர் யாத்திரையாகப் பேணும் மக்களும் வாழவே செய்கின்றனர். சிவத்திலிருந்து வந்த சீவன் மறுப்படியும் சிவத்தை நோக்கிச் செல்வதே மனிதப் பிறவியின் நோக்கம் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் தொகை சிறிதாயிருக்கலாம் ஆனால் இச்சிறு கூட்டத்தினரை நாம் விரும்பித் தேடின், எல்லா நாடுகளிலும், வெவ்வேறு மொழி பேசும் வித்தியாசமான சமயநெறிகளைப் பின்பற்றும், மக்களிடையே சந்திக்க முடியும். யான் பெற்ற அநுபவங்கள் இப் பேருண்மையை ஸ்திரப்படுத்திவிட்டன. பாரமார்த்திகம் ஆசியாவின் தனித்தர்மம் என்றோ, உலகாயதமே, ஐரோப்பாவின் சாதாரண தன்மையென்றோ இன்று எவராவது கூறமுடியாது. இருபதாவது நூற்றாண்டில் இரண்டும் எல்லாக் கண்டங்களிலும் பரவியுள்ளன. ஒன்று கூடியும் மற்றையது குறைந்தும் இருக்கலாம்; வித்தியாசம் அம்மட்டே.

அடுத்த படியாகக் கூறவேண்டிய பிறிதோர் முன்னுரையும், உண்டு. எனது ஐரோப்பியப் பிரயாணம், முக்கிய

ஆகாரமில்லாமல் கூட பல நாள் வாழ முடியும்.



மாக ஜேர்மனியில் மார்பேக் சர்வகலாசாலையில் நடைபெற்ற சர்வமத சரித்திர மகாநாட்டில்கலந்து கொள்வதற்காக என்பதைப்பலர் அறிவார்கள். ஆனால், யாத்திரையின் அட்டவணை அமைப்பிற்குத்தூண்டுதலாக விருந்தஅந்தரங்கக்கருத்துக்கள் சிலஉள. தொடர்ந்துவரப்போகும் இக் கட்டுரைகளை அன்பர்கள் வாசித்து ரஸித்துப் பயன் அடைவதற்கு, இக் கருத்துக்களையும் விளக்க வேண்டியது எனது கடமையென நம்புகிறேன். அன்பர்கள் இதனைத் தற்புகழ்ச்சியாகக் கருதார்கள் என்பதும் எனது நம்பிக்கை.

சின்னஞ் சிறுவயசிலிருந்தே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது அடியார்பக்தி. சுந்தர மூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத் தொகை முழுவதையும் மனப்பாடமாகச் சொல்லும் புண்ணியம் எனக்கு எட்டுவயதிலேயே கிடைத்த ஒன்று. அக்காலக் கல்விமுறை அளித்த அரும்வாய்ப்பு இது. அப்பதிகத்தின் பத்தாவது பாடல் என்றுமே என் சிந்தனையில் இருந்துள்ளது. அறிவு மலர மலர, ஆராய்ச்சி வளர வளர, அதனால் உள்ளம் விரிய விரிய, ''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என்ற சுந்தரர் வாக்கின் அருங் கருத்தும் விரிந்து கொண்டே வந்தது. என்னைப் பொறுத்த மட்டில், சைவசமயத்தின் சமரஸ மாண்பின் தனிச்சிறப்பிற்கு வித்திட்டது இந்த ஒருவரியேயாம். இதற்கு விளக்கம் தந்த சேக்கிழார் சுவாமிகள் ''மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக் கப்பால், முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோடும்'' என இடத்தால் அப்பாலாந் தன்மையையும், ''நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும் 'நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்'' எனக் காலத்தால் அப்பாலாம் இப்பாலாம் தன்மையையும், அருமையாய்க் காட்டிய விதமானது, எனது ஆர்வத்திற்கும் ஆராய்ச்சிக்கும் அரை நூற்றாண்டு காலமாக ஆதரவளித்து வந்துள்ளது.

—[தொடரும்]—

மக்கள் மூலமாகவே காரியத்தை சாதித்துக் கொள்கிறார்.

# மனித இயல்பு

இலட்சியத்துக்காகத் துன்பத்தை ஏற்றுக் கொள்பவர் தங்களையும் மனித ஜாதியையும் உயர்த்திக் கொள்கிறார்கள்.

மனிதனுடைய இயல்பு தீயதேயன்று. மிருகங்கள் கூட அன்புக்கு அடிபணியக் காண்கின்றோம். மனித இயல்பு பற்றி நாம் சந்தேகப்படவே வேண்டாம்.

மிருக இயல்பை விட்டவனே மனித இயல்பைப் பெறுகின்றான். அஹிம்சையை அனுஷ்டிக்காதவன் மனித உருவம் உடையவனாயினும் நம்முடைய மூதாதை என்று கூறப்படும் மனிதக் குரங்கின் தன்மையையே உடையவன்.

நீரானது ஆவியாகி உயர்ந்து பின் நீராகி உலகத்தைக் காக்கின்றது. அதுபோல் நாமும் சுயநலத்தை விட்டு தெய்வத் தன்மை பெற்றுப் பின் மக்களுக்குச் சேவை செய்தல் வேண்டும்.

— மகாத்மா.

# குறைகள்

அடியார்களிடம் கூடக் குறைகள் உண்டு. அவர்களை அடியார்கள் என்பது அவர்களிடம் குறைகள் இல்லை என்பதனாலன்று. அவர்கள் தங்கள் குறைகளை உணர்ந்து அவைகளை மறைத்து வையாமல் திருத்துவதற்காகச் சதாகாலமும் முயல்வதனால்தான்.

என் குறைகளைத் தங்கம் நிறுக்கும் தராசில் நிறுப்பதில்லை. அணுவை அண்டமாகச் செய்தால் மட்டுமே அவைகளை நான் நீக்க முடியும். மனிதன் தன்னுடைய குறைகளைச் சரிவர உணர்ந்து கொள்ள முடியாது. அதனால் அவற்றைப் பெரிதாகக் கருதிக் கொள்வதே அவற்றைப் போக்குவதற்கான வழி.

— மகாத்மா.

---

கடவுளேதான் உயிரும், உண்மையும், ஒளியும் ஆவார்.



# சுத்தானந்தரின் கடிதங்கள் (15)

சேரமாதேவி குருகுலம்.

அன்புள்ள சகோதரருக்கு -, உள்ளார்ந்த அன்பு வணக்கம். மஹாத்மா காந்தியடிகளின் யோசனை மறுக்க முடியாதது. ஆனால் எதிரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே. தாங்கள் பெல்காமிலிருந்து எழுதியது போல், தேஜஸ், வர்ச்சஸ், தார்மீகஜீவனம் இவை மகாத்மாவின் வாக்கிற்கே ஒரு சக்தியை அளிக்கின்றன. உண்மை; அதே தார்மீக ஜீவனமுள்ளவர்கள் உடனே இணங்குவார்கள். ஆனால், தமிழ்நாட்டின் தலைவிதியைத்தான் நோகவேண்டும். நம்மிடையே ஒரு குருகோவிந்தன் இருந்தும், நாம் ஓர் அகாலிக் கூட்டமாக முடியாதிருப்பது வெட்கம்; வெட்கம்!

நாம் திருநெல்வேலியில் கம்பன் திருவிழா நடைபெற்ற அன்றிரவு, ஆற்றுமணலில் தனியே பேசியது தங்களுக்கு நினைவிருக்கலாம். என் சித்தம் யோக சித்தியிலேயே ஆழ்ந்துவிட்டது. நான் பரிபூரணனாகாமல், என்னை அரைகுறையாய் வைத்துக்கொண்டு மற்றவர்களைக் கரையேற்றப் புகுவது, குருடனைக் குருடன் நடத்துவதாகும். ஆதலால் இன்று முதல் நான் இரண்டு காரியங்களிலேயே கவனம் செலுத்தத் தீர்மானித்திருக்கிறேன்: (1) தவயோகம், (2) அகில ஞானப் பொக்கிஷங்களை ஆராய்ந்து கவிதையாகவும் வசனமாகவும் தமிழை வளப்படுத்துதல். இவற்றிற்குத் தினம் பதினைந்து மணி நேரம் செலவிட்டு வருகிறேன். மீதிநேரத்தில் அத்தியாவசியமான பொதுநலங்களை என் இயல்பிற்கேற்றபடி மூன்றேமணி நேரத்திற்கு மேற்படாமல் செய்ய முடியும். நான் பலவழிகளிலும் பூரணம் பெற்று, தெய்வசாட்சாத்காரம் பெற்று, ஸஹஸ்ரார சித்தியால் உலகிற்கு உதவவேண்டும் என்று மனச்சாட்சி சொல்லுகிறது. இப்போது மார்க்கோனி சூக்ஷ்மாகாசத்தின் மூலம் சம்ப • ஜாலங்களை உலகெல்லாம் பரப்பலாம் என்று கண்டுபிடித்திருக்கிறான். அதைவிட அதிசூக்ஷ்மமான மனத்திற்கும், அதனினும் பன்மடங்கு சூக்ஷ்மமான சுத்தான்மாவிற்கும் அபாரசக்தி உண்டு. யோகத்தால் அந்தச் சக்தியை வளர்த்தால், உள்ள இடத்திலிருந்தே நமது எண்ணங்களை உலகெல்லாம் பரப்பி, மனித சமுதாயத்தில் புதிய மாறுதல்களை உண்டாக்கலாம் என்று எனக்கு உறுதியாகிறது. நான் யோகசாஸ்திரங்களையும் அனுபவத்தையும் ஒட்டியே இப்படிச் சொல்லுகிறேன். இக்காலம் அச்சிலும் மேடையிலும் அலறி நாம் செய்வதைவிட, ஒரு நல்ல யோகி குகையிலிருந்து அபாரமான காரியங்களைச் சாதிக்க

---

ஆனால் பிரார்த்தனையில்லாமல் அரைவினாடி கூட வாழ முடியாது.

லாம் என்று தோன்றுகிறது. என் மனம் காடு மலை வனாந்தரங்களைத் தேடுகிறது; ஏகாந்தத்தை விரும்புகிறது. இப்போ நடக்கும் விவாதங்களும் அபாண்டமான புகார்களும் என் கண்ணைத் திறந்தன. தமிழ்நாடு பெரிய காரியங்களுக்கு இன்னும் தயாராயில்லை. காங்கிரி, சபர்மதி, சாந்திநிகேதனம், இராதாசாமி சத்சங்கம் போன்ற பெரிய நிலையங்கள் நாட்டி வேலை செய்ய ஆர்வம் உண்டு. ஆனால் காலம் எதிரிடையா யிருக்கிறது. அபாரமான தெய்வ பலமும், புத்தி சாமார்த்தியமும், தியாக தீரமும், சாதிமத சாத்திரகோத்திர சள்ளைகளில்லாத அகண்ட சுத்தான்ம சமரஸானுபவமும், ஆத்மசக்தியும் இருந்தாலே, இனி நாம் பெரிய காரியங்கள் செய்ய அருகராவோம். அப்படிப்பட்ட சக்தியை யோகத்தால் வளர்த்துக் கொண்டு ஈசுவர ஆதேசம் பெற்றாலே நாம் மகத்தான காரியங்களைத் தொடங்கலாம் என்று தோன்றுகிறது. ஆதலால் இன்றுமுதல் லௌகிக காரியங்களைக் குறைத்து, யோகசாதனத்திற்குப் பெரும்பாலான நேரத்தைக் கொடுக்க விரும்புகிறேன். வாரமௌனத்தைத் தினமௌனமாகவே மாற்ற வேண்டும். அத்யாவசியமாக உயர்ந்த விஷயங்களைப் பற்றி நன்றாகச் சிந்தித்து இரண்டொருமணி நேரம் பேசி மீதி நேரம் மௌனமாகயிருந்தே ஆத்ம ஜயமும் கலைவெற்றியும் அடைய உறுதிகொண்டுள்ளேன். உலகில் நான் எந்த இடத்திலும் அபிமானம் வைக்காமல், அகண்ட சுத்தசக்தியிடமே என்னை முழுதும் அர்ப்பணித்திருக்கிறேன். என்னைப் பக்குவப்படுத்த அவள் விட்ட வழியிற் சென்று, அவ்வப்போது எதிரும் நல்ல காரியங்களை அவளுக்கே கர்மயக்ஞமாகச் செய்துவிட்டு,, பலனை அவளுக்கே நிவேதிப்பேன். தியானத்தால் ஞானம் வளர்த்தல், பரமபக்தியால் ஈசுவர கிருபைக்குப் பாத்திரமாதல், நிஷ்காம்ய கருமத்தால் உலகாலயத்திற்குத் தொண்டு செய்தல் - இம் மூன்றையும் எனது ஜீவன விரதமாக முன்பே கொண்டுதான் துறவணிந்தேன்.

ஆகையால் நான் இனி எனது பர்ணசாலையளவில் இருந்து நிஷ்டானுபூதியுடன் பேனாவால் இயன்றதைச் செய்வேன். இப்போது நடக்கும் கிளர்ச்சி குருகுலத்தை வளரவிடாதென்று தெரிகிறது. ஆனால் இதைக் கிளப்பியவர்களே பிற்காலம் ஹிந்து தரும சேவையைப் போற்றுவார்கள். அவர்களிடமும் மனச்சாட்சியிருக்கிறதல்லவா?

தங்களிடம் என் அன்பு என்றும் தீவிரமாக இருக்கும், எனது அந்தராத்ம நிலை, காலநிலை இரண்டையும் உத்தேசித்தே இக் கடிதம் எழுதலானேன். பாரதசக்தி மஹாகாவியம் முடிந்தது. என்

உள்ளத் தூய்மையில்லாதவர் பிரார்த்தனை செய்ய இயலாது.



விரதம் பலித்தது. திருவருள் கூடினால் அதை மீண்டும் செப்பனிட்டு வெளியிட வேண்டும். தமிழருக்கு என் கடமையைச் செய்தேன். இனித் தமிழர் கடமை. என் அறிவுச் செல்வம் தமிழர் பொதுவுடைமை எந்தாய் வாழ்க.

'பாரதசக்தி' ஸம்பூர்ணமாய்விட்டது; இன்னும் இரண்டு தரம் உருக்கி வார்த்தால், உலகிற்குத் தங்கள் கலைநாக்காற் சொன்னது போல் ஒரு மகாகாவியம் என்றும் பயனாகிக்கொண்டிருக்கும். ஏராளமான நூல்களும் எழுதியாயிற்று. இனி, எழுதியதை சாட்சாத்கரித்து ஈசுவரனின் ஆதேசத்திற்குக் காத்திருக்க விரும்புகிறேன். ஆத்மநேயன்-

ஐயர் எழுதிய பதில்;- ஸ்ரீ பாரதியாருக்கு-, நமஸ்காரம். தங்கள் அந்தக் கரணத்தையும் யோகசித்தியின்பால் ஆரோகணிக்கும் சித்தத்தையும் முன்பே அறிந்திருக்கிறேன். நான்வந்து நிஸ்சலமாகத் தங்கள் சாதனம் நடக்க வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்; பாரதசக்தி மஹாகாவியம் முடிந்தது பற்றி சந்தோஷிக்கிறேன்; அது 'மஹாகர்வியம்' என்பதை மறுபடியும் ஸ்திரப்படுத்துகிறேன். ஸஹோதரன், வ. வெ. சு. ஐயர்.]

## விவேகானந்தர் கட்டுரைப் போட்டி

"கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் மாத சஞ்சிகையாகிய இந்து இளைஞன் சுவாமி விவேகானந்தர் நினைவு குறித்து ஒரு கட்டுரைப்போட்டி நடத்த ஒழுங்கு செய்துள்ளது. கட்டுரைகள் இந்து இளைஞனில் இரண்டு பக்கங்களுக்குக் குறையாமலும் நாலு பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். எல்லோரும் பங்குபற்றக் கூடிய இப்போட்டிக்குப் பிரவேசக்கட்டணம் ஏதும் இல்லை.

பலருடைய வசதிக்காக இப் போட்டியின் முடிவு திகதி 15 – 11 – 61 ஆகப் பின்போடப்பட்டிருக்கிறது. முறையே 50/-, 30/-, 20/-, பெறுமதியான மூன்று பரிசுகள் வழங்கப்படும். மேலும் விபரம் வேண்டுவோர் "விவேகானந்தர் கட்டுரைப்போட்டி" 100, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு - 10 (இலங்கை) என்னும் விலாசத்திற்கு எழுதலாம்.

பிரார்த்தனை என்பது வாயால் மாத்திரம் ஜபிப்பதாகாது.

# கஞ்சன்காடு - ஆனந்தாச்சிரமச் செய்தி

*1961 – ஆவணி – 19ம் நாள்* பூஜியப் பப்பா தற்போது சுகயீனமாக இருக்கிறார். அவர் ஈரல் சம்பந்தமான நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதாக டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். அவரை சிறிது காலம் ஓய்வெடுத்துக் கொள்ளும்படியாகக் கூறியிருக்கின்றார்கள். கடிதத் தொடர்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றன.

## அன்னை கிருஷ்ணாபாயின் பிரார்த்தனை.

எல்லாம் தன்னுளடக்கி, எங்கும் வியாபித்திருக்கும் என்னருமைப் பப்பாவே, உம்மை எங்களுக்குக் காட்டுவதற்காக நீர் ராமதாஸ் உருவத்தில் தோன்றியிருக்கின்றீர். உங்கள் உடலில் ஈரல் நோயினால் தாங்கள் வருந்த வேண்டுமென்று விரும்பியிருக்கிறீர்கள். இந்த நோய் உங்களிடமிருந்தே வந்திருக்கிறது. ஏனென்றால், உங்களைத் தவிர வேறு யார் உண்டு? என்னுடைய ஒரே ஆசையும், பிரார்த்தனையும் இந்த நோயிலிருந்து சீக்கிரம் விடுபட்டுப் பூரண சுகம் பெற வேண்டுமென்பதே. சுகமடைந்து, இந்தப் பிரபஞ்சத்தில் உள்ளவர்களின் துக்கத்தையும், துயரத்தையும் அகற்றி நிம்மதியையும், பரமானந்தத்தையும் கொடுத்தருள்வீர்களாக. கடவுளின் பிள்ளைகளாகிய உங்களிடம் நான் வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறேன். நீங்கள் அவர் நாமத்தைப் பலமுறை ஜபிக்கவும். உங்களுடையபிரார்த்தனைநமதுஎல்லாம் வல்ல குருவின் சுகவீனத்தை நீக்கும். அதனால் மக்களின் துயரம் நீங்கும். பதினொரு கோடி நாம ஜபம் விரைவில் எழுதியும், ஜபித்தும் முடிப்பதென்பது எனது சங்கல்பம், ராமநாமத்தை எந்நேரமும், எங்கும் எழுதவும், ஜபிக்கவும் உங்களை நான் வேண்டிக்கொள்கிறேன். ஒவ்வொரு நாளும் நீங்கள் ஜபித்த நேரம் எழுதவும், நீங்கள் எழுதின எண்ணிக்கையின் தொகையும் ஆஸ்ரமத்திற்கு மாதம் ஒரு முறை எழுதி அனுப்புங்கள். ராம நாமத்தையோ அல்லது வேறு எந்த நாமத்தையோ எழுதலாம், ஜபிக்கலாம்.

---

தியாகம்தான் சிறந்த வீரம்.



# மனிதப் பிறவி எப்பொழுது எவ்விதம் பயன்பெறுகிறது?

பிறந்த மனிதன் ஒருநாள் கண்டிப்பாய் மறைந்து போகிறான். மறைந்து போனவன், மறைந்தபிறகு மறுபடியும் ஏதோ ஒரு வித ஜீவராசியில் பிறக்கிறான் என்பது பல பெரியோர்களின் தீர்மானம். நம்மைப் படைத்து, காத்து, முடிவில் அழித்துவிடும் கடவுள்கூட இந்தத் தீர்மானத்தையே, பல சமயங்களில், பல முறைகளால், இவ்வுலகத்தாருக்கு அறிவுரைத்திருக்கிறார். இப்பிறவியில் நமக்கு, நாம் பெற்றிருக்கும் துன்பங்களை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும், துன்பங்களையே அளிக்கக்கூடிய சிற்றின்பங்களைக் கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாதென்றும், தோஷமற்ற உண்மையான ஆனந்தத்தைப் பெற்றுவிட வேண்டுமென்ற ஆசை, இருக்கிறது. இந்த ஆசையே நமக்கு அந்த ஆனந்தத்தைக் கிட்டும்படி செய்ய மூலகாரணம் என்றும் தோன்றுகிறது. இந்த ஆசை இக்காரணத்தால் பரமமங்களகரமானது என்ற நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. மறுபிறப்பில் இப்படிப்பட்ட மங்களகரமான ஆசை ஏற்படுமோ என்ற சந்தேகமும் இருக்கிறது! ஆகையால் இப்பிறவியிலேயே நமக்கு உண்டாயிருக்கும் இந்த நிர்தோஷமான உண்மையான ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டுவிட வேண்டும். இதுவே மனிதன் செய்யவேண்டிய காரியமாகிறது.

உண்மையான, தோஷமற்ற, ஆனந்தத்தைப் பெறவேண்டுமென்ற ஆசை இப்பிறவியில் நிறைவேற வேண்டுமானால், இந்த ஆசை தீவிரமாக இருக்க வேண்டும். மற்ற ஆசைகளுக்கு நம்முடைய மனத்தில் இடம் தரலாகாது. பொன், பெண், கீர்த்தி இவைகளில் லவலேசமும் மோஹம் கொள்ளலாகாது. சிற்றின்பங்களில் பற்றில்லாமல் ஆனகாலத்திலேதான் தோஷமற்ற உண்மையான ஆனந்தத்தில் ஆசை வளரும். இந்த ஆசை வளர்ந்தால் ஒழிய அது பூர்த்தியாகாது. இந்த ஆசை வளர, வளர, நம்மிடம் நற்குணங்கள் குடிகொள்ள வரும். ஸர்வபூததயை, மனத்தின்தூய்மை, பிறரை ஏமாற்றாமல் இருப்பது, என்ற பலவித குணங்கள் நம்மிடம் குடிவந்து நம்மைத் தூய்மையான ஆனந்தத்தில் மூழ்க அடிக்கும். எல்லா ஜீவன்களிடமும் சகோதர வாஞ்சை ஏற்படும். இவ்வளவு நற்குணங்களும் நம்மிடம் கூடி வாழ்ந்துவர, நமக்கு ஏற்பட்டிருக்கும் நிர்தோஷமான உண்மையான ஆனந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளத் துடிப்பு ஏற்படும்.

இந்தத் துடிப்பு ஏற்பட்டவுடன், நம்முடைய வாழ்க்கையின்

---

தியாகத்தின் ஆதியும் அந்தமுமே பிரார்த்தனை.

ஒவ்வொரு நிமிஷமும், அந்த ஆனந்தத்தை நோக்கியே பாய்ந்தோடும். அப்பொழுது, இப்படிப்பட்ட ஆனந்தத்தைப் பெற்ற அடியார்களின் வரலாறுகளே நம்முடைய செவிகளில் பாயும். இப்படிப்பட்ட அடியார்கள் பல கோடிகளானாலும், பறபல நாடுகளைச் சேர்ந்தவர்களானாலும், பற்பல மத ஆசாரங்களைக் கடைப்பிடித்தவர்களானாலும், எல்லோருடைய அனுபவத்திலும் ஒற்றுமையே காணப்படும். காணப்படும் அனுபவ ஒற்றுமையை ஒருவாறு கூறுவோமாகில், அது பின்வருமாறு இருக்கும்;- ''கடவுளே ஆனந்தம். அவனருகிலிருந்து அவனுடைய கருணை ததும்பும் லீலைகளைக் கண்டு தன்னை மறந்து சுகித்திருப்பதே அவனை (ஆனந்தனான கடவுளை) பெற்றதாகும். இந்த ஆனந்த நிலையிலிருப்பவனுக்கு இரண்டு வஸ்துக்கள் தான் புலப்படும். வேறு வஸ்துக்கள் கிடையாது. பகவானுடைய கிருபாரூபமான பகவத்லீலையும் அதை அனுபவிக்கும் ஜீவனுடைய அழிவற்ற ஸ்திதியும். இந்த நிலையில் ஜீவன் அனுபவிப்பது ஆனந்தமயமான கடவுளைத்தான். இந்த நிலையை அளிப்பவனும் பகவான். இந்த நிலையை அடைய வேண்டுமென்ற ஆசையை அளிப்பவனும் பகவான்''

அடியார்களின் அனுபவ ஒற்றுமை மேலே கண்டபடி. இதை ப்ருந்தாவனத்தில் காணலாம். நிர்தோஷமான உண்மையான ஆனந்தத்தில் ஆசை கொண்டவர்கள் இந்த பிருந்தாவனத்திற்கு இழுக்கப்பட்டு வருகிறார்கள். பிருந்தாவனவிஹாரியால் இழுக்கப்பட்டே இங்கு வந்ததாய் உணருகிறார்கள். பகவானான கண்ணனுக்கு எல்லா இடமும் சொந்தமானாலும், இந்த பிருந்தாவனம் அவன் குழந்தையாயிருந்து விளையாடும் இடமில்லையா? கண்ணன் விளையாடும் இடத்திற்குக் கண்ணனே அழைத்து வந்ததை எண்ணி இதில் நுழையும்போதே' அந்த பிரியன் என்னென்ன செய்யப் போகிறானோவென்று மனது குதூஹலத்துடன் எண்ணுகிறது. அப்பொழுதே யமுனைமணல், யமுனைஜலம், மயில்கூட்டங்கள், மாடுகள். நாய்கள், முதலிய எல்லா வஸ்துக்களும் நம்மை அன்புடன் வரவேற்கிறதை அனுபவிக்கிறோம். வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்க இடம் தரும் தருக்களை ஏராளமாகக் காண்கிறோம். கண்ணில் படாமல் அழைத்துவந்த கண்ணன், இவ்வளவு உருவங்களில் நம்முடைய கண்களில் தோன்றுகிறான் என்பதை உணருகிறோம். எல்லா உலக ஆசாபாசங்களைத் துறந்து கண்ணனே கதியென்று கண்ணனிருக்கும் அந்த இடத்திலேயே வசிக்கும் பாக்கியசாலிகளைப் பார்க்கிறோம். அவர்கள் நம்மை வணங்குகிறார்கள். அவர்களுடைய முகமலர்ச்சியால் நம்மிடம் அவர்களுக்கு ஏற்படும் அன்பை வெளியிட்டு நம்மை வரவேற்கிறார்கள். அவர்களை மஹாத்





மாக்கள் என்று நாம் முதலில் எண்ணியபோதிலும், பிறகு அவர்கள் பகவானான கண்ணனே என்பதை அறிகிறோம். ஏனென்றால், பகவானான கண்ணனுக்குத்தான் நம்மிடம் இவ்வித கபடமற்ற தோஷத்தைக் காணாத அன்பு உண்டு என்று நம்முடைய உள்ளம் தெரிவிக்கிறது. கண்ணனுடைய உருவேயான அந்தப் பரமபுருஷர்கள் செய்வதையே நாமும் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. அவர்கள் அங்கு இருக்கும் ஆலயங்களுக்குச் சென்று, கண்ணனுடைய நாமங்களையும் புகழ்ச்சியையும் பாடி மகிழ்ந்து, ஆடிக்கூத்தாடுகிறார்கள். உடலை மறக்கிறார்கள். கர்வமற்று தரையில் கட்டையைப்போல் விழுந்து வணங்குகிறார்கள். நாமும் இப்படியே செய்து வருகிறோம். காலம் முழுதும் இவ்விதமே ஓடுகிறது. இது சிலசமயம் ஆச்சரியப்படக்கூடியதாயிருக்கிறது. எதையோ நாடி இவ்விதம் செய்வதில்லை. இவ்விதம் செய்வதின் பலன் இவ்விதம் செய்வதே என்று அறிந்துவிடுகிறோம். இதுவே பக்தி. இதுவே பிரேமை. இந்த நிலையை அளிப்பது பிருந்தாவனம்.

இந்தப் பிருந்தாவனத்திற்குக் கிருஷ்ணனால் இழுக்கப்பட்டு வந்த ஒரு ஜீவனுடைய பிருந்தாவன வாழ்க்கையைக் கவனிப்போம். பஞ்ஜாப் தேசத்திலிருந்து சில வருஷங்களுக்கு முன் அகதி ஒருத்தி இங்கு வந்து சேர்ந்தாள். அவள் ஓர் கிழவி. உறவினர் எல்லோரும் பரகதிடைந்து விட்டதால் தனிமையில் வந்தாள். வந்த நிமிஷமே இவ்விடம் வசித்தவர்கள் வசிப்பவர்கள் எல்லோரும் அவளுக்கு வெகு காலமாய் பழகியிருப்பவர்களாகக் கண்டாள். அகதியாய் தனிமையில், ஒருவித பலமுமில்லாமல் வந்தபோதிலும், அவளுக்கு ஒருவித பயமும் ஏற்படவில்லை. செவ்வனே செழிப்பில் வாழ்ந்த சிறிய வயதில் அனுபவித்த ஆனந்தத்தைக் காட்டிலும் பன்மடங்கு ஆனந்தத்தில் மிதந்திருந்தாள். பிருந்தாவன வாசிகள் அவளுக்கு ஏதோ உடை, உணவு, தங்க இடம் இவைகளை அளித்தார்கள். எளியதானாலும் அவர்கள் அன்புடன் அளித்ததால் இவைகள் வெகுருசியாயிருந்தன. மேலே கூறப்பட்ட பிருந்தாவன அனுபவத்தை முற்றிலும் அனுபவித்தாள். அவள் அதைச் சொல்வதாயிருந்தால், கேட்டு மகிழ ஆயிரங் காதுகள் வேண்டும்.

சாதுக்கள் உருவம் கொண்ட கண்ணனைப் பின்பற்றி அவள் தினந்தோறும் ''வம்சீவிஹாரி'' கோவிலுக்குச்சென்று ஆனந்தக் கண்ணீர் நிறைந்த கண்களுடன் அவனைக் கண்டு குதூஹலித்தாள். அவள் ஆனந்தமாய் வாழ்க்கை நடத்துவதைக்கண்ட பிரஜ

வாஸிகள் மகிழ்ந்தனர். ஒருநாள் விடாமல், தினம் 'வம்ஸிவிஹாரி' தர்சனம் செய்து வந்த இவளுக்கு ஒருநாள் கோவிலுக்குச் செல்ல முடியவில்லை. உடலின் பலஹீனம்தான் காரணம். "இன்று தர்சன மில்லையே" என்று கதறுவதைக், கூட இருந்தவர்கள் அறிவார்கள். வெகுநேரம் தூங்கவில்லை. அவளுடைய கதறலைச் சுற்றியிருந்தவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கதறல் நின்றது. சுற்றி யிருந்தவர்கள் நெருங்கிப் பார்த்தார்கள். அவள் மேல் பீதாம்பரம் (மஞ்சள்பட்டு)போர்த்திருந்தது. தங்கமெட்டி இரண்டும் இருந்தது.மயில் தோகையும் உடல்மேல் இருந்தது. உடலில் மூச்சில்லை. சுற்றி இருந் தவர்களுக்கு ஆச்சரியம். விஷயம் ஊர் முழுவதும் பரவியது. சாதுக் கள் நாம கோஷத்துடன் காட்சியைக் காணக் கூடிவிட்டனர். பொழுது விடிந்தது. "வம்சீவிஹாரி"க்கோவில் பூசாரி பகவான ணிந்த பட்டும் மெட்டியும் காணுததைக் கண்டு பயந்தனர். அப்பொ ழுது அசரீரி "என்னைக் காணுமல் நேற்றுத் துடித்த அகதியைக்காண நேற்று இரவு சென்றேன். அவளைத் தொட்டுத் தழுவிக் கொடுத் தேன்: என் பீதாம்பரத்தையும், மெட்டியையும் மயில்தோகையையும் அங்கு விட்டுவிட்டு வந்து விட்டேன்" என்று சொல்லிற்று. இதைக் கேட்ட பூசாரிக்கு ஆச்சரியமாயிருந்தது. "இந்த அகதியை எப்படிக் கண்டு பிடிப்பது?" என்று திகைத்தார். அதேசமயத்தில், அகதியி ருந்த இடத்திலிருந்த ஒருவர் ஊரில் நடந்ததை வெளியிட்டார். உடனே பூசாரி கோயில் மரியாதைகளுடன் சென்று, அகதியின் புண் ணிய உடலைப் பூஜித்தார். அகதி பகவானை அடைந்தாள். அவளு டைய மனிதப்பிறவியை அவள் பயன்படுத்திக்கொண்டாள் என்று நாம் எண்ணலாமல்லவா?

**விரசவாசியின்சரணதூளி**

---


## நாராயணன் கைத்தொழிற்சாலை

மாபிள், சிமெந்து, இரும்பு என்பவற்றில் இருந்து எல்லாவித பொருட்களும் செய்து கொடுக்கப்படும். விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி அறிந்து கொள்க.

மனேச்சர்
நாராயணன் கைத்தொழிற்சாலை
தொல்புரம், சுழிபுரம்.


---

திருப்தி விஷயத்தில் என்னுடன் யாரும் போட்டி போடமுடியாது.



# 'ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாப் பிரபுவின் வாழ்க்கை வரலாறு'

(சுருக்கம்)

[சுவாமி அபேதாநந்தா]

சற்குரு ஸ்ரீ கௌராங்க பகவான் நம்மிடையே ஸங்கீர்த்த ஆசா ரியனுக விளங்குகின்றுர். பஜனுனந்திகளுக்கு கருணைக் கடலாகிய மஹாப் பிரபுவை, கலியுக பாவன ஸ்வபஜன விபஜன ப்ரயோஜன அவதாரமான ஸ்ரீ பகவத் கிருஷ்ண சைதன்ய மஹாப் பிரபுவை ஒரு நிமிஷமேனும் மறந்து வாழ முடியாது. அப்பேற்பட்ட புனித வாழ்க்கையில் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் ஈடுபடச் செய்து வாழ்க்கையின் இலட்சியத்தை மக்களுக்குக் காட்டி தகுதி யற்ற சாதாரண மக்களுக்குக்கூட ராதா கிருஷ்ணனுகக் காட்சி தந்து நாமப் பிரசாரம் செய்த நாமாவதார மூர்த்தியன்றோ ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாப் பிரபு!

ஸ்ரீ கௌராங்க பகவானுடைய திரு அவதாரத்தைப் பற்றி ஒரு அழகான இதிஹாசம் வைஷ்ணவர்களிடையே பரவியுள்ளது. கோ லோக நாதனுகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஓர் சமயம் ஸ்ரீ ராதை யின் அலௌகிகமான பிரேமையை நினைந்து அளவு கடந்த மகிழ்ச்சி யில் மூழ்கி இருந்தாராம். "இப்படியும் ஒரு பிரேமை உண்டா? என் பிரிய ராதை இரவு பகல் ஓயாமல் தன்னை மறந்து என் சேவையி லேயே ஈடுபட்டிருக்கிறுளே! இந்த இனிய பிரேமையின் பெருமை தான் என்னே? இதை எப்படி விளக்குவேன்? மதுர மூர்த்தியான என்னை சேவித்து எல்லையில்லா இன்பத்தை அடைகிறுள் என் பிரிய ராதை. என் சுகத்தையே தன் சுகமாகக் கருதுகிறுள் ராதை. நானே மதுர மூர்த்தியாகையால் அதன் பெருமையை விளக்க நான் தகுதி அற்றவன். என் ராதை ஒருத்திக்குத்தான் இந்த பிரேமையின் பெரு மையும் அருமையும் தெரியும். இந்த திவ்வியமான பிரேமையை எப்ப டியும் அனுபவித்தே தீரவேண்டும். உலக மக்கள் அனைவரும் இந்த ரசத்தைப் பருகி அளவு கடந்த இன்பத்தைப் பெற வேண்டும். இதற்கு என்ன செய்யலாம்?" என்று பகவான் சிந்தனையுறுகிறுர். அச்சமயம் ஸ்ரீ ராதை பகவானைத் தேடிக் கொண்டு அங்கு வருகிறுள். ஸ்ரீ ராதை பகவானுடைய காலடிகளில் அமர்ந்து கொள்ளுகிறுள். பகவானுடைய மலரடிகளைத் தாங்கி தன்

---

என்னுடைய பெரிய செல்வம் திருப்தியே.

மடிமீது வைத்துக் கொண்டு வருடத் தொடங்குகிறாள். "என்ன பிரபு, யோசனை பலமாக இருக்கிறதே!" என்று கேட்டு பகவானது திருமுகத்தைப் பார்க்கிறாள். பகவானுடைய சமாதி கலைந்து ராதையைப் பார்க்கிறார். ராதையினுடைய அலௌகிகமான பிரேமையை நினைத்த போது சொல்லவொண்ணாத உணர்ச்சிக்கு வசப்பட்டு தாரை தாரையாகக் கண்ணீர் வடிக்கிறார் பிரபு. ராதை திடுக்கிடுகிறாள். "பிரபு' என்ன இது? கண்ணீர் வடிப்பதில் பெண்கள் தான் தேர்ச்சி பெற்றவர்கள் என்று சொல்வார்கள். ஆனால் என் பிரபு எங்களை மிஞ்சி விடுவார் போலிருக்கிறதே" என்று கூறி கண்ணீரைத் துடைத்து உபசரிக்கிறாள் ஸ்ரீ ராதை. பகவான் ராதையை அணைத்துக் கொள்ளுகிறார். "ராதை நான் ஒன்று கேட்கிறேன் தருவாயா?"

**ராதை:** "என்ன பிரபு கேட்கிறீர்கள்? உங்கள் ராதையை வேடிக்கை பார்க்கிறீர்களா?"

**கிருஷ்ணன்:** "சரி, எதைக் கேட்டாலும் கொடுப்பாய் அல்லவா?

**ராதை:** அதில் என்ன சந்தேகம்?

**கிருஷ்ணன்:** ராதே நீ எனக்கு சேவை செய்வது போல் நானும் உனக்கு சேவை செய்ய வேண்டும்.

(மம சிரஸி மண்டனம் தேஹி பத பல்லவ உதாஹரணம் ப்ரியே சாரு ஸீதே - (அஷ்டபதி) என்று ராதையிடம் அன்று சொன்னது உண்மைதான் என்பதை நிரூபிப்பதற்குத்தான் ஜயதேவராக வந்து எழுதி வைத்தார் போலும்!) என் ப்ரிய ராதே, உன்னுடைய அற்புதமான பிரேமையை உலக மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்கள் அதை அனுபவிப்பதைக் கண்ணாரப் பார்க்க வேண்டும். அதோடு நானும் அந்தப் பிரேமையில் பொங்கும் இன்ப ரசத்தைப் பருக வேண்டும். பிரேம பக்தியில் சுரக்கும் எல்லையில்லா இன்பத்தை மக்கள் பருகி மகிழ வேண்டும். ஆகவே நீ உன் பிரேமையை எனக்குப் பிச்சையாக அளிக்கத் தயங்க மாட்டாய் என்று கருதுகிறேன்" என்று பகவான் ராதையின் கால்களைப் பற்றிக் கொள்ளுகிறார். ராதை பகவானின் இந்த சாகஸத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு மிக வருந்துகிறாள்.

ராதை: "பிரபு, இப்படி அக்கிரமம் செய்யாதீர்கள். என் பிரேமையை வாங்கிக் கொண்டு என்னைத் தள்ளி விடப் பார்க்கிறீர்களா? உங்களை ஒரு போதும் மறந்தறியாத என்னை மறக்கச் சொல்லுகிறீர்களா? வேண்டாம். என்னைப் பிரிக்காதீர்கள். நம்மிடையே பிளவு ஏற்படுத்தாதீர்கள். என் பிரேமையுடன் என்னையும் ஏற்றுக் கொள்ளுங்கள் பிரபு. பரிசுத்த பிரேமையின் மூலம் மிகமிக எல்லையற்ற துன்பங்கள் ஏற்படலாம். அதை என் பிரபு அனுபவிப்பதை நான் ஒருபோதும் பொறுக்கமாட்டேன். ஆகையால் நான் உங்களுக்கே

---

உண்மையான நாகரிகம் தேவைகளைப் பெருக்குவதன்று.



சொந்தமான, உங்கள் வடிவமேயான பிரேமையைத் தந்து நான் உம்மை ஆவரணம் செய்து கொள்ளுவேன். அப்படியானால் பிரேமையில் ஏற்படும் துன்பத்தையெல்லாம் நான் ஏற்றுக் கொள்ள முடியும் அல்லவா? இதற்கு அடியாளுக்கு அனுமதி தந்தே ஆகவேண்டும்' என்று கூறி ராதை மயக்கம் அடைகிறாள். பகவான் ராதையை வாரி எடுத்து அணைத்துக் கொள்ளுகிறார்.

**கிருஷ்ணன்:** "ராதே, உன் எண்ணந்தானே என் எண்ணம். நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து செல்லுவோம். உலகில் பிரேம பக்தியை நிலை நாட்டுவோம்" என்று பகர்ந்து, ராதை கிருஷ்ணனையும், கிருஷ்ணன் ராதையையும் தழுவிக் கொள்ளுகிறார்கள். ராதையையும் கிருஷ்ணனையும் காணவில்லை. நீலமேக சியாமள வர்ணனாகிய ஹரி கௌரஹரியாக அங்கு காட்சி தந்தார். ராதையும் கிருஷ்ணனும் ஒன்றாகச் சேர்ந்த பிரேமை வடிவம் தான் கௌரஹரி. கிருஷ்ணனேதான். ஆனால் நீலவர்ணன் இல்லை. அப்படி என்றால் ராதையோ? ஆம்; ராதையேதான். ஆனால் பெண் வடிவம் இல்லை. அதுவே கௌரஹரி. ராதையும் கிருஷ்ணனும் ஒன்று சேர்த்த திரு அவதாரம். ஹரி ஓம்!

பக்ஷிம வங்காளத்தில் நாடியா ஜில்லாவில் நவத்வீபம் என்னும் கிராமத்தில் ஸ்ரீ மாயாபுரி என்னும் பவித்திர கிராமத்தில் பண்டித ஜகன்னாத மிச்ரர் என்ற பக்தோத்தமருக்கும், அவரது தர்ம பத்தினி சசீதேவிக்கும் திருக்குமாரனாக அவதரிக்கிறார் ஸ்ரீ கௌரஹரி. சக வருஷம் 1407, விக்ரம வருஷம் 1542, பால்குண மாதம் 23ந் தேதி அதாவது கி. பி. 1486 பிப்ரவரி 18ந் தேதியன்று பால்குண பௌர்ணமி சனிக்கிழமை சந்திர கிரகண புண்ய காலம் இதெல்லாம் பொருந்திய புனித நாளிலே திருவவதாரம் செய்கிறார், கௌரஹரி. சந்தியா வேளை தாண்டி சந்திர கிரஹண புண்ய காலத்திலே மக்களெல்லாம், எல்லாம் மிக்க ஆவேசத்துடனும், மகிழ்ச்சியுடனும் ஹரிபோல், ஹரிபோல் என்று கூக்குரலிட்டுக் கொண்டு கங்கா ஸ்நானம் செய்யும் புனித வேளை அது. ஹோலிகை என்ற ஹிரண்யகசிபுவின் தங்கை பிரஹலாதனைக் கொன்றே தீருவேன் என்று மல்லுக் கட்டிக் கொண்டு ஐந்து வயதுப் பாலனையும் இடுப்பில் எடுத்துக் கொண்டு அக்னிப் பிரவேசம் செய்கிறாள். ஆனால் ஹோலிகையின் மாயம் பலிக்கவில்லை. இந்தக் கொடிய அரக்கி அக்கினியில் எரிந்து சாம்பலாகிறாள். பிரஹலாதனை அக்கினி சுடவில்லை. அவன் பொல்லாத மருந்து ஒன்றை வைத்துக் கொண்டிருந்தான் இல்லையா? ('நாராயணா' என்னும் நாமம்) 'நாராயணா', 'நாராயணா' என்று ஆனந்தம் நிருத்தம் செய்கிறார் அந்த பக்த சிகாமணி. பிரஹலாத பக்தியை நினைவூட்டும் நாள்தான் ஹோலி பண்டிகை. எல்லோரும் துன்பமெல்லாம்

---

தேவைகளை வேண்டுமென்று குறைப்பதே நாகரிகம்.

மறந்து மிக ஆனந்தமாகக் கொண்டாடும் பொன்னாள் அது. இப்படி எல்லாம் பொருந்திய புனித வேளையில் கௌரஹரி திரு அவதாரம் செய்கிறார். 'ஸம்பவாமி யுகே யுகே' என்ற பகவானுடைய வார்த்தைக் கிணங்க கெரளஹரி உதயமானார். பகவானுடைய அவதாரம் மிகவும் அவசியமான வேளை அது. சங்கரருடைய அத்வைத மார்க்கம் பிரசாரத்திலேயே இருந்தது. ஆனால் அத்வைத மார்க்கமும், வைதீக மார்க்கமும் எல்லோருக்கும் தகுந்த மார்க்கங்களாக இல்லை. அதுவுமல்லாமல் இஸ்லாம் முதலிய மற்ற மதங்களின் தொல்லை இன்னொரு பக்கம் மக்களைத் துன்புறுத்தியது. இப்படி ஜனங்கள் மிகப் பரிதாபமான நிலையில் இருந்த தருணத்தில்தான் பகவான் கௌரஹரி அவதரித்தார். வர்ணாச்ரம தர்மம், ஜாதி மதம் முதலிய எல்லாவித கட்டுப்பாடுகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு சிறந்த தர்மம் தான் அப்பொழுது வேண்டி இருந்தது. அதுவே புராதனமான பாகவத தர்மம் அல்லது பக்தி தர்மம் எனப்படும். மனிதர்களெல்லாம் வேற்றுமை இல்லாமல் பின்பற்றி கடைத்தேறும் ஏக மார்க்கம் பக்தி மார்க்கம் ஒன்றேயாகும். மக்களிடையே ஒன்று சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம். 'படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்' என்பது போல் பேச்சிலே சமரஸம் இருக்கும். செய்கையில் நான் எனதுதான் முன்னிற்கும். கௌராங்க பகவானுடைய சரித்திரம் படிப்பவர்களுக்கு ஜாதி மதாசாரங்களைப் பகவான் விரும்புவதில்லை என்றும், பக்தி ஒன்றைத்தான் பகவான் விரும்புகிறார் என்பதும் நன்கு விளங்கும்.

''பக்தியா துஷ்யதி கேவலம் நச குண:
பக்தி ப்ரியோ மாதவா:''

பகவான் பக்தியை மட்டும் விரும்புகிறார். குணங்களை விரும்பவில்லை. பகவான் பாவத்தை (இறை உணர்ச்சி) விரும்புகிறார். அல்லது நம் படிப்பு, திறமை, யுத்தி சாதுரியம் முதலியவைகளை மதிக்க மாட்டார்.

'மூர்க்கோ வத தி விஷ்ணாயா தீரோ வததி விஷ்ணவே
உபயோஸ்த்து ஷுபம் புண்யம் பாவக் க்ராஹீ ஜனார்த்தனா!

படிப்பில்லாதவர்கள் விஷ்ணாயா என்று சொல்வார்கள். விஷ்ணு சப்தத்தின் சதுர்த்தியில் விஷ்ணவே என்று தான் வரும். 'இராமகய' 'கிருஷ்ணாய' என்பது போல ஓர் 'ஆய' சேர்த்து விஷ்ணாய என்று சொல்லி விடுவார்கள். தெரியாதவர்கள் ஆனால் விஷ்ணாய நம: என்றாலும், விஷ்ணவே நம; என்றாலும் பகவானுக்கு ஒரே மாதிரித்தான். விஷ்ணாய நம; என்று சொன்னவனைப் பார்த்து இவன் படிப்பில்லாத முட்டாள் என்று கோபித்துக் கொள்ள மாட்டார். படித்தவன் பாமரன், பெரியவன், சிறியவன் என்றெல்லாம் நினைப்பது அகங்காரம் எனும் விஷம் ஏறின கோழை மனிதர்களின் இயல்பாகும். பக்தி மார்க்கத்தில் இந்த தொல்லைகள் ஒன்றும் இல்லை. பெரியவன், சிறியவன், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி பண்டிதன் பாமரன், ஏழை பணக்காரன் என்ற ஒரு விதமான வேற்றுமையும் இல்லாதது பக்தி தர்மம்.

நான் மூடநம்பிக்கை உடையவன் அல்லன்.



''நாஸ்தி தேஷு, ஜாதி வித்யா ரூப
குல தன க்ரியாதி பேத:

(நாரத பக்தி சூத்திரம்)

பகவான் கௌராங்கன் அந்த பிரேம பக்தியை நிலைநாட்டவே அவதரிக்கிறார். தான் மஹா பண்டிதனாக இருந்தும், பெரிய வையாகரணாக இருந்தும், அதை எல்லாம் துச்சமாக உதறித் தள்ளிவிட்டு தெருவிலே குதித்துக் கூத்தாடி, உருண்டு புரண்டு பஜனை செய்கிறார் கௌராங்க மஹாப் பிரபு. கோபி பக்தி ஒன்றுதான் இந்தப் பக்திக்கு உவமை காட்ட முடியும். கோபிகளுக்குப் படிப்பாய் இருந்தது மற்றத் திறமைகள் ஒன்றும் இல்லாதவர்கள். சுயநலமுடையவர்களால் ஒன்றுக்கும் அதிகாரமில்லை என்று ஒதுக்கி வைக்கப்பட்ட பெண் குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு வேறொன்றும் தெரியாவிட்டாலும் கள்ளங் கபடமற்று பகவானை பக்தி செய்யத் தெரிந்திருந்தார்கள். பெரிய பெரிய ரிஷிகளுக்கும், மஹான்களுக்கும் கூட துர்லபமான பகவத் கிருபையை அவர்கள் பரிசுத்த பிரேமையின் மூலம் அடைந்து விட்டார்கள். அறம் பொருள் இன்பத்தை மட்டுமல்லாமல் மஹா யோகிகளாலும் இயலாத, மோக்ஷம் அல்லது வீட்டையும் துறந்தவர்கள். கோபிகள் வீடு, வாசல், சொத்து, சுகம், கணவன், குழந்தைகள் எல்லாவற்றையும் உதறித் தள்ளி கண்ணனுக்காகவே வாழ்ந்தவர்கள் சிறிதேனும் தன் சுகத்தைக் கருதாத, சுயநலம் இல்லாதவர்கள். தன் சுகத்திற்கென்று வாழ்வது தாழ்வு என்றும், பிறருடைய சுகம் அல்லது பகவானுடைய சுகத்திற்காக வாழ்வதுதான் வாழ்வு என்பதை நிதர்சனமாகக் காட்டிக் கொடுத்தவர்கள் கோபிகள். அதுதான் தர்மத்திற்கும், யோகத்திற்கும் பகுத்தறிவுக்கும் கூட எட்ட முடியாத பிரேமை பக்தி. இந்தப் பிரேம பக்தியை உலகுக்கு

பழமை என்பதற்காகப் பொய் உண்மையாகி விடாது.

அளிப்பதற்காகவே அவதரித்தவர் கௌராங்கப் பிரபு. மஹாப்பிரபு வாள்நாள் முழுவதும் தன்னை ரதையாகவே மதித்தார். சியாமபிரம்ம மான பகவானுக்கு' ஆண் பெண் வேற்றுமை இல்லை என்பதற்காக தான் புருஷ உருவம் தாங்கி ராதையாக வாழ்ந்தார்.

(தொடரும்)


## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

உபயோகிக்கும் முறை

இந்தச் சூரணத்தில் அரை தோலா அளவு எடுத்து அத்துடன் அரை தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்-கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய், நிறையச்சாப்பிடலாம். வாரம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினால் தயாரிக்கப் பெற்றது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ரீஸ் – சேலம் 2 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி

மலாயாவில் கிடைக்குமிடம்:-

ஸ்ரீ கணபதி அன் கொம்பனி (ஜவுளி வியாபாரம்)

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ

போன் நெ. 3917. த. பெ. 37.


நம்புவது என்பதும் ஒரு அறமேயாகும்.